மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தேසියම්




WELLA HAIR DRESSING

WELLA வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



குரல் - 98 | 06.07.2023 (வியாழக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 9 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# சிறிலங்கா பாதுகாப்புத் தரப்பின் தடைகளை மீறி முல்லைத்தீவில் தற்கொடை நினைவேந்தல்





பக்கம் 4



சிறிலங்கா அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கரும்புலிகள் நாள்(தற்கொடை) நினைவு கூரப்பட்டுள்ளது. பொது இடங்களில் வைத்து கரும்புலிகள் நாள் நிகழ்வுகளை நடந்த சிறிலங்கா காவல்துறையினர் மற்றும் புலானாய்வாளர்கள் தடைவித்துள்ள நிலையில் தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் இந்த நினைவு கூரல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சிகப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் கரும்புலிகளை மக்கள் நினைவு கூர்ந்துள்ளார்கள்.

முல்லை ஈசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரும்புலிகளின் பொது திருவுருவப்படம் வைக்கப்பட்டு படத்திற்கான பொதுச்சுடரினை தாயக விடுதலைப்போரில் நான்கு பிள்ளைகளை கொடுத்து அதில் ஒருபிள்ளை கரும்புலியாக மண்ணுக்கு வித்தான பிள்ளைகளை பெற்றெடுத்த

## யாழ்.மண்டைதீவுக் காணிகள் சுவீகரிப்பு: வெடிக்கவுள்ள போராட்டம்!



பக்கம் 4

யாழ்ப்பாணம் -மண்டைதீவுக் காணிகளைக் கடற்படைக்குச் சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெறவுள்ள போராட்டத்தில் அனைவரும் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தப் போராட்டமானது எதிர்வரும் புதன்கிழமையன்று (12.07.2023) காலை.7.30 மணியளவில் நடைபெறவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

## கேப்பாப்பிலவில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டம்




பக்கம் 4

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்தி காணிகளுக்குரிய பொதுமக்கள் புதன்கிழமை (05) ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் ஆரம்ப

## மன்னார் மனித புதைகுழி விவகாரம்! எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானம்!!



பக்கம் 4

மன்னார் “சதோச“ மனித புதைகுழி அகழ்வு தொடர்பான, விசாரணை அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கான கட்டளை உருவாக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று புதன்கிழமை(05.07.2023) மன்னார் சதோச மனித புதைகுழி

## தமிழர்களுக்காக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி முரண்பட்டாரா!

### சாணக்கியன் எம்.பி தகவல்!!

தொல்பொருள் அதிகாரிகளுடன் ஜனாதிபதி தமிழர்களுக்கு சார்பாக பேசிய காணொளிகள் செம்மைப்படுத்தப்பட்டவை என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

பக்கம் 4

## தமிழ் நீதியரசர்களை கொண்டு வழக்கை நடத்துங்கள்..! – சபையில் சார்ள்ஸ் எம்.பி



பக்கம் 4

வடக்கு கிழக்கில் நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளை மேன்முறையீட்டுக்காக கொழும்புக்கு வரும் போது அதற்கான மொழிபெயர்ப்பிற்கு மட்டும் இரண்டுவருட காலங்கள் செல்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றுவரும் நீதிமன்றங்களில் நீதி

## நிர்வாக சீர்கேட்டை கைவிட்டு பனைவளத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுங்கள்!

### கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் கோரிக்கை..!!



பக்கம் 4

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிவரும் பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகச் சீர்கேட்டையும் முறையற்ற நியமனங்களையும் நிறுத்தி, பனை அபிவிருத்திசபையை வினைதிறன் மிக்கதாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கோரியு

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தால்

## நாடு அவசரகால நிலைமைக்குள் செல்லும் அபாயமுள்ளது! சுவஸ்திகா தெரிவிப்பு!!



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தால் நாடு அவசரகால நிலைமைக்குள் செல்லும் அபாயமுள்ளது என வர்த்தக மற்றும் வணிக தொழிலாளர் சங்க தலைவி சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாளைக்கு தொழிலாளர்களை 8 மணித்தியாலங்களே வேலை வாங்கலாமென சர்வதேச ரீதியாக சட்டமுள்ளது. வருங்காலத்தில் இச் சட்டம் வருமாயின் ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி 2 மணித்தியாலம் முதல் 15 மணித்தியாலம் வரை வேலை செய்ய வேண்டும்.

ஒரு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தினால் அவரை நீக்குவதற்கான உரிமையில்லையென தொழில் தருணர்கள் கூறிவருகின்றனர். அந்த அதிகாரத்தை தருமாறு கோருகின்றனர்.

தற்போது தொழிலை விட்டு நீக்கினால் தொழில் நீதிமன்றத்திற்கு சென்று உரிய கொடுப்பனவு மற்றும் நீதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொழில் தருநர்களின் கைகளில் அதிகாரம் வழங்குமிடத்து நாளைய தினம் தொழில் இருக்குமென்பது கூட நிச்சயத்தன்மையற்ற நிலையுள்ளது.

கடந்த வருடம் 500000தொழில் இல்லாமல் போனதென உலகளாவிய தரவுகள் கூறுகின்றன. இவ்வாறு அதிகாரங்களை வழங்கினால் இது போல் பல தொழில்கள் காணாமல் போகும்.

பெண்களுக்கு இரவு நேர வேலை செய்ய உரிமையில்லை என்பது பொய்ப் பிரச்சாரம். ஆயினும் பெண்களை வேலைக்கு அமர்த்த வேண்டுமாயின் அவரிடம் அனுமதி. பெறுதல், பெண் பாதுகாவலரை நியமித்தல் போன்ற விடயங்கள் சட்டத்திலுள்ளது.

2017 அரசசாங்கம் பெண்களை வேலைக்கு அமர்த்தும் போது ஆண் தொழிளாளர்கள் கூட இவ் விடயங்கள் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்தனர்.

சமூக மட்டத்தில் அரசு பெண்கள் இரவு நேர வேலை செய்ய அனுமதியில்லை என பொய்ப் பிரச்சாரம் மேற்கொள்கின்றது.

தொழிலாளர்களை எவ்வாறு சுரண்டி இலாபத்தை பெறும் நோக்கிலே அரசு தொழிலாளர் சட்டங்களை மாற்ற முயற்சிக்கின்றது. எதிர் வரும் காலத்தில் கொண்டு வரும் சட்ட மூலங்களை கூர்மையாக அவதானித்தல் வேண்டும்.

தொழிலாளர் சட்டங்கள் பற்றி கதைக்காததுக்கான காரணம் தொழிலாளர்கள் அச் சட்டத்தால் பாதிப்படைவது வெளித்தெரிவதில்லை. அதை ஊடகங்களும் வெளிக்கொணர்வதில்லை.

பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவந்த போது நாடு பொருளாதார ரீதியாக பாதிப்படைந்திருந்தது. தற்போதும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டுவரப்படும் போதும் அவ்வாறான நிலையிலுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சரத்துக்கள் காணப்படுகின்றன ஆயினும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் முப்பது சரத்துக்களே உள்ளன.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தனிநபர்களை குறிவைத்த சட்டம் என்பதை விட சமூகங்களை குறிவைத்து கொண்டுவரப்பட்ட சட்டமாகவுள்ளது..

பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் இராணுவத்தினர் கைது செய்ய முடியாது மாறாக புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் இராணுவமோ கடற்படையோ ஒரு நபரை பயங்கரவாதி எனக் கருதினால் கைது செய்யலாம்.

அவசரகாலம் ஜனாதிபதியால் அமுலாக்கும் பட்சத்திலே இராணுவத்தினால் கைது செய்யப்பட முடியும்.

யுத்த காலத்தில் அவசரகால சட்டம் அமுலாக்கத்திற்கு எதிராக சர்வதேச அழுத்தத்தால் அது நீக்கப்பட்டது. ஆயினும் புதிய இச் சட்ட மூலத்தால் நாடு அவசரகால நிலைமைக்குள் செல்லும் அபாயமுள்ளது.

கடந்த வாரத்திலும் ஊழியர் சேமலாப நிதியை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது. இதே போல் தான் பல்வேறு சட்டம் மூலம் அரசாங்கம் சாதாரண மக்களை அடக்கிக் கொண்டிருக்கின்றது.

தற்போது சமுர்த்தி உட்பட நலநோக்கு திட்டத்தால் பட்டினிச் சாவு நாட்டில் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் எதிர்காலத்தில் இத் திட்டங்கள் நீக்குப்படுமிடத்து பாரிய இடரை மக்கள் எதிர்நோக்க நேரிடும். எனவே இவற்றுக்கெதிராக மக்களே சிந்தித்து செயற்பட வேண்டும் - எனத் தெரிவித்தார்

# யாழில் இராணுவத்தால் பெண்

## தலைமைத்துவ குடும்பத்திற்கு புதிய வீடு..!






இராணுவத்தால் பெண் தலைமைத்துவ குடம்பம் ஒன்றிற்கான வீடு அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

சின்னையா மகன் ஜோச் அருள்ராஜ் அவர்களின் நினைவாக சின்னையா தபிதா , வன்னி எயிட் , நான்காவது சிங்க படைப்பிரிவின் முழுமையான ஆளணி கட்டுமான உதவியுடன் குறித்த வீடு அமைக்கும் பணிகள் நேற்று (05) அல்வாய் மேற்கு தம்பியன்புலம் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் குறித்த வீடு அமைப்பதற்கான நாள் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் 4 வது சிங்க படைப்பிரிவின் தளபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கட்டைக்காடு 55வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரட்ணவும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறியும், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை உதவி பொலீஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொது வைத்தியசாலை மருத்துவர் உமாசுதன், வன்னி எயிட் ஒருங்கிணைப்பாளர் ஜெகநாதன், பருத்தித்துறை பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சேந்தன், மற்றும் 551 வது படைப்பிரிவு தளபதி பிரிகேடியர் யூட் காரிய கரவண, மற்றும் இராணுவ அதிகாரிகள் கிராம சேவகர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் புதிதாக திறக்கப்பட உள்ள மதுபான விற்பனை நிலையத்திற்கான அனுமதியை உடன் நிறுத்துக!!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை!

மன்னார் நகரில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட உள்ளமை குறித்தும், அதற்கான அனுமதியை உடன் நிறுத்தக் கோரியும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப்பிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,,,

மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வீதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முன்பாக புதிதாக மது விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட உள்ளதாக அறிகிறோம்.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமான போதை பொருட்களால் சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்கிறோம்.

குறிப்பாக இளையோர் மத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் பலரும் போதைக்கு அடிமையாகி உள்ளனர்.

அத்துடன் சாதாரண தொழிலாளர்களின் நாளாந்த வருமானத்தின் பெரும் பகுதி இவ்வாறான போதை வஸ்துக்கு பயன் படுத்தப்படுவதால் குடும்ப வாழ்வில் பெரும் பின்னடைவை சந்திப்பதோடு சிறுவர்கள் மத்தியில் பல்வேறு உளத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மன்னார் நகரத்தில் எந்த பகுதியிலும் அனுமதி வழங்குவது சமூக நிலையியலுக்கு உகந்தது இல்லை.

எனவே மக்கள் செறிந்து வாழும் பிரதேசமும் மிக கிட்டிய தூரத்தில் மூன்று ஆலயங்கள் இருப்பதாலும் அவ்விடத்தில் மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவ்விதமான அரசியல் அழுத்தம் ஏற்பட்டாலும் அனுமதி வழங்கக் கூடாது என்பதை தங்களுக்கு சமூக நலனியல் நோக்கு நிலையிலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய
ஆக்கங்கள், விமர்சனங்களை
அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில்
இடம்பெறும் விளையாட்டு, கலை,
கலாசார நிகழ்வுகளை
புகைப்படங்களுடன்
அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில்
நிலவும் பிரச்சினைகள்
தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# துணைவேந்தர் பதவி முதல் அனைத்து இடங்களிலும் அரசியல் கலப்பற்ற நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் : சிவரூபன்!

துணைவேந்தர் பதவி முதல் அனைத்து இடங்களிலும் அரசியல் கலப்பற்ற நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என யாழ் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் சிவரூபன் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூட்டத்தில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் எதிர்கொண்ட அடக்குமுறைகளை விட வரப்போகும் பபயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பெரிய அடக்கு முறையாக இருக்கப்போவதில்லை.

பழைய பதவிகளை வைத்துக்கொண்டு மீண்டுமொரு கிளர்ச்சி மற்றும் முற்றுகைப் போராட்டம் வரலாம் என்பதைப் பெரிதாக்கி பெரும்பான்மை இனத்தவரினதும் அவர்கள் சார் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு இவ்வாறான சட்டங்



களை அரசு முன்னகர்த்த முயற்சிக்கின்றது.

நாம் இவை தொடர்பில் தமிழ் மக்கள் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை விடுத்து சிங்கள அடிமட்ட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை முதல் இதற்கெதிராக திருப்ப வேண்டும். அதன் பின்னால் நாங்கள் அணி திரள்வதே பொருத்தமானதாயிருக்கும்.

இதை விட தொழிற்சங்கங்கள் ஒவ்வொன்றும் மத்தியில் வேறு விதமாகவும் அடி மட்டத்தில் வேறு விதமாகவும் செயற்படுகின்றன. அங்குள்ள தொழிற்சங்கங்கள் எந்தவொரு அரசியல் கட்சியின் பின்புலததிலும் நிகழ்ச்சி நிரலிலும் இருக்கின்றனவே தவிர சாதாரண மக்கள் மற்றும் தொழிலாளிகள் பாதிக்கப்படுவது தொடர்பில் எந்தவொரு கரிசனையையும் காட்டுவதில்லை

அனைத்து தொழிற்சங்கங்களும் ஒரு குடையின் கீழ் இணைந்து செயற்பட முற்படுமாயின் இவ்வாறான சட்டங்களை இலகுவாக எதிர்க்க முடியும்.

இவற்றை விட காலத்திற்கு காலம் வரும் அரசியல் வாதிகள் வாக்காளர்ளை திருப்திபடுத்து முகமாக முறையற்ற தொழில் நியமனங்களை வழங்குகின்றனர். எனவே அரசியல் கலப்பற்ற அரச நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். இவற்றை துணைவேந்தர் பதவி முதல் அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

# துணைவேந்தர் எமது கலாச்சாரங்களை பாதுகாப்பவராக இருக்க வேண்டும்: அரசியல் நோக்கம் இருக்கக் கூடாது!! அங்கஜன் எம்.பி!



யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கான தெரிவு இடம்பெற உள்ள நிலையில் துணைவேந்தராக வருபவர் பல்கலைக்கழக மற்றும் தமிழ் பாரம்பரியங்களை பாதுகாப்பவராக அமைய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தனிச் சிறப்புள்ளது.

அதாவது பரமேஸ்வராக் கல்லூரியை தானமாக வழங்கி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள்.

ஒரு கல்விக் கூடத்திற்காக ஒரு கல்விக் கூட்டத்தை தானம் கொடுத்து உருவாக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழத்தின் துணைவேந்தர்களாக இருந்த பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர் வித்தியானந்தன் மற்றும் பேராசிரியர் துரைராஜா போன்றவர்கள் எமது சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார்கள்

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கான துணைவேந்தர் தெரிவு இடம்பெற உள்ள நிலையில் துணைவேந்தராக தேர்வு செய்யப்படுபவர் எமது வரலாறுகளை தாங்கிக் செல்பவர்களாக இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பிரிவுக்காக நால்வர் போட்டியிடுகின்ற நிலையில் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும்.

ஜனாதிபதி தான் விரும்புகின்ற ஒருவரை துணைவேந்தராக தெரிவு செய்யும் பொறுப்பு உள்ள நிலையில் தெரிவு அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான தெரிவாக அமையக் கூடாது.

ஆகவே நான் குறித்த கருத்தை அரசியல் வாதி என்ற நிலையில் பதிவு செய்யாமல் நானும் ஒரு குடிமகன் என்ற நீதியில் எமது மரபுகள் சம்பிரதாயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நீதியில் பதிவு செய்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தலூடாகவே கொள்கை ரீதியான மாற்றங்களும் சட்டங்களும் கொண்டுவரப்பட வேண்டும்: அகிலன் வேண்டுகோள்!

தேர்தலூடாகவே கொள்கை ரீதியான மாற்றங்களும் சட்டங்களும் கொண்டுவரப்பட வேண்டும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளன உபதலைவர் அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்

யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களின் வருமானமானது தற்போது அதிகரிக்கவில்லை எனினும் செலவுகள் இருமடங்காகியுள்ளன.. உலக உணவுத் திட்ட புள்ளிவிபரத்தின் படி நாற்கூலி செய்பவர்களின் வருமானம் ஐம்பது வீதத்தால் குறைந்துள்ளது.

நாட்டில் அரசியல் நெருக்கடியுமுள்ளது. போர் வீரர் என்று கூறிய கோட்டபாயா நாட்டை விட்டு ஓடினாலும் அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களே ஜனாதிபதியை கொண்டுவந்தனர். தம்மை நியாயப்படுத்த முடியாததால் சட்ட மாற்றம் கொள்கை மாற்றத்தை கொண்டு வருகின்றனர்.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதைவிட எமது அரசியல் உரிமை போன்ற அனைத்து உரிமைகளையும் கட்டுப்படுத்தி மக்களைச் சுரண்டும நிலையுள்ளது. ஆகவே அந்த யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

உழைக்கும் மக்களின் ஒய்வூதியமாக இருக்கும் ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதிய வட்டிவீதத்தை எதிர்வரும் கால



த்தில் குறைக்கவுள்ளதாக வர்த்தகமானி மூலம் அறிவித்துள்ளனர்.

இது தோட்டத் தொழிலாளர்கள் முதல் பல்கலைக்கழக ஊழியர்கள் வரை பாதிப்பை ஏற்படுத்தவுள்ளது.

ஒருவர் 10 வருடம் வேலை செய்து ஒய்வு பெறும் பட்சத்தில் கடன் மறுசீரமைப்பு நிலை. தொடருமாயின் பெறும் ஒய்வூதியத் தொகையில் 30 சதவீத பண இழப்பு ஏற்படும் நிலையுள்ளது.

எத்தனையோ தனியார் முதலாளிகள் முதலிட்ட முதலீடுகளில் கடன் மறு சீரமைப்பை மேற்கொள்ளாமல் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியம் போன்றவற்றில் குறைப்பை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

பாரிய பொருளாதார நெருக்கடி நிலைக்குள் நியாயமற்ற பாராளுமன்றத்தை பயன்படுத்தி நாட்டையே வித்தியாசமான நிலைக்குட்படுத்தும் நிலையுள்ளது. அரசாங்கம் ஜனநாயக மற்ற நிலையிலுள்ள நிலையில் ஏனைய நிறுவனங்களும் ஏதேட்சையான ஜனநாயக மற்ற நிலையிலேயுள்ளன.

இது அரசியல் , பொருளாதார , சட்ட அடக்கு முறை என்றே கருதலாம். எதிர்வரும் காலங்களில் வரும் பாரிய மாற்றங்கள் முற்போக்கானவையா பிற்போக்கானவையா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு சென்றால் பாசிச நிலைக்குள்ளே செல்லும். இந் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் பாரிய எதிப்பை இதுவரை தெரிவிகாதது கவலையளிக்கும் விடயம்.

நாம் இவற்றிற்கான தீர்வு சர்வதேசத்திடமிருந்து தீர்வு வருமென எதிர்பார்த்தாலும் மாறாக தீர்வு மக்களிடமே உள்ளது. கடன் மறுசீரமைப்பை கூட சர்வதேச நாடுகள் வரவேற்றுள்ளன.

தேர்தலூடாக ஜனநாயக மாற்றத்தின் பின்னரே கொள்கை ரீதியான மாற்றங்களாயினும் சட்டங்களாயினும் கொண்டுவரப்பட வேண்டும்.

எது எவ்வாறாயினும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடும் மக்களின் போராட்டங்களை அடக்கும் நோக்கிலேயே அரசாங்கம் முனைப்பாகவுள்ளாகத் தெரிவித்தார்

# சீன அட்டை இனத்தால் எமது அட்டை இனங்கள் அழிகின்றது! சுப்பிரமணியம் தெரிவிப்பு!



இலங்கைக்கே உரித்தான அட்டைக் குஞ்சுகள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அட்டை இனங்களால் அழிவுக்குள்ளாவதாக அகில இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கடற்பரப்பில் அட்டை பண்ணைகள் விஸ்தரிக்கப்பட்டு சீனா நிரந்தரமாக கால் ஊன்றுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகிறது.

பாரம்பரியமாக கடற் தொழிலை மேற்கொண்டு வந்த மீனவ மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள துறை சார்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கறை இன்றி செயல்படுகிறார்.

மீனவர் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை அமைச்சர் நளினமாக பார்ப்பதுடன் சில வேளை கிண்டலடிக்கும் செயற்படுகளும் இடம்பெறுகிறது.

தீவக வடக்கு ஊர்காவற்துறை பகுதியில் தடை செய்யப்பட்ட மீன் பிடி நடவடிக்கையை தடை செய்யுமாறு அரச அதிபர் கோரிய நிலையிலும் கடற் தொழில் அமைச்சரின் ஆதரவுடன் மீன்பிடி நடவடிக்கை இடம் பெறுகிறது.

குறித்த செயற்பாட்டை நோக்கும்போது அமைச்சர் தனது வாக்கு வங்கிக்காகச் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுகின்றது.

அட்டைப் பண்ணைகளால் கடல் வளத்துக்கு பாதிப்பு என பல தடவைகள் அமைச்சருக்கு தெரியப்படுத்தவும் அதனை விரிவுபடுத்தும் செயற்பாட்டிலே ஈடுபட்டு வருகிறார்.

அட்டை பண்ணைகள் பத்து வருடங்களுக்குப் பின்னர் கைவிடப்படும் நிலை உருவாகும் போது மீனவர்கள் சோம்பேறிகளாகி கடல் தொழிலுக்கு செல்ல முடியாத சூழல் உருவாகும்.

ஆகவே எமது வளமான கடற் பிரதேசம் சீனாவின் நிரந்தரக் கடற் பிரதேசமாக மாறுவதற்கு முன்னர் அதனை தடுத்து நிறுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் முன்னாள் சமாசத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கரை நகர் அம்பாள் கடை தொழிலாளர் சங்கத்தின் தலைவர் இராஜசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## சிறிலங்கா பாதுகாப்புத் தர...

தாயாரான புஸ்பராணி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொது திருவுருவப்படத்திற்கான சுடர்களை மூன்று மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றியதை தொடர்ந்து கரும்புலிகளின் பொது படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் நினைவுரைகளை தொடர்ந்து சிறப்புரையினை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் நிகழ்த்தியுள்ளார்.

கரும்புலிகள் நாளில் கலந்துகொண்ட அனைவருக்கும் கரும்புலிகள் நினைவு சுமந்து தென்னங்கன்றுகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

து.ரவிகரன் அவர்கள் பேசும் போது அந்நிய ஆதிக்கத்திற்குள் இருந்துகொண்டு நாங்கள் கரும்புலிகளை நினைவிற்கொள்கின்றோம் என்றால் அது எங்கள் உணர்வு அந்த உணர்வுடன் எங்கள் நிலம் காக்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இன்றும் நாங்கள் இயலக்கூடியவகையில் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

கரும்புலிகள் நாள் மதிக்கவேண்டியது. பெறுமதியான நாள். எங்கள் வீரத்தினை உலகிற்கு காட்டியநாள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.மண்டைதீவுக் காணிகள்...

யாழ்.வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் (து/07) உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.

அதனடிப்படையில், குறித்த காணி அளவீட்டுப் பணிகளை எதிர்வரும் 2023.07.12 ஆம் திகதி ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் (12.07.2023) இடம்பெறும் காணி அளவீட்டுப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு அனைவரும் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நடைபெறவுள்ள போராட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கேப்பாப்பிலவில் இராணுவத்தி...

இடத்திலிருந்து ஆரம்பமாகி, பேரணியாக கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தஜத தொடர்ந்து குறித்த இராணுவ முகாமின் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்கவும், இராணுவத்தினை வெளியேறுமாறும் வலியுறுத்தி பதாதைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தினதில் ஈடுபட்டனர். அத்தோடு இராணுவத்தினர் தமது காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருப்பதால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினர் தமது காணிகளிலுள்ள வளங்களைச் சுரண்டுவதற்காகவும், நந்திக்கடலின் வளத்தினைச் சுரண்டுவதற்குமாகவே தமது காணிகளை அபகரித்து வைத்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களால் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

அதேவேளை நீண்டகாலமாக தமது காணிகளை விடுவிக்குமாறு தாம் வலியுறுத்தி வருகின்றபோதும் இதுவரையில் தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை எனவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கதறி அழுது தமது காணிகளை விடுவிக்குமாறு இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்டுக்கொண்டனர். அவ்வாறு காணிளை இராணுவத்தினர் விடுவிக்கததவறின் இராணுவமுகாமிற்குள் அத்துமீறி நுழைய வேண்டிய சூழல் எழும் எனும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது எச்சரித்திருந்தனர். இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் அங்கு மயக்கமுற்று வீழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மனித புதைகுழி விவ...

வழக்கு B/232, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஏற்கனவே அழைக்கப்பட்ட 27 திணைக்களத்தின் பிரதிநிதிகள் சார்பில் பலர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அத்துடன் அரச தரப்பு சட்டத்தரணி, விசேட சட்ட வைத்திய அதிகாரி (ஜே.எம்.ஓ), பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணிகள், ஓ.எம்.பி அலுவலக சட்டத்தரணிகள், இராணுவ சட்டத்தரணிகள் போன்ற பலர் பிரசன்னமாகி இருந்தனர்.

இந்நிலையில் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட வினாக்களுக்கு அமைவாக சதோச மனித புதை குழியில் ஏற்கனவே 376 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டதாகவும் அதனை மீண்டும் அகழ்ந்து மிகுதி மனித எச்சங்களை உடனடியாக எடுப்பதற்கான தேவை இல்லை, என ஒட்டுமொத்த தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு அமைவாக தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் தற்போது இந்த மனிதப் புதைகுழியின் மனித எச்சங்கள் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆனால் காணாமல் போன தரப்பில் ஒட்டுமொத்த அறிக்கை **(compression report)** என்ற அடிப்படையிலும் இதுவரையில் நடந்தது என்ன? இனி தொடர்ந்து என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது? அவற்றை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? போன்ற விளக்கங்களை சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ச நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதுஎன அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த வழக்கு செப்டம்பர் மாதம் 12, 13-ம் திகதிகளில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

## தமிழர்களுக்காக தொல்...

தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில்,தொல்பொருள் திணைக்களம் தொடர்பான கலந்துரையாடலில் எங்களுக்கு சார்பாக ஜனாதிபதி எதுவும் செய்யவில்லை. அப்படி அவர் செயற்படுவாராக இருந்தால் அவர் விதுரவிக்ரமநாயக்கவை தான் பதவி விலக்கி இருக்க வேண்டும்.

அவர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு தரப்பிற்கும் சார்பாக செயற்படுவதாகவும் தொல்பொருள் திணைக்களத்துடன் முரண்படுவது போன்றும் நாடகம் நடத்துகின்றார்.

இதேவேளை அந்த காணொளி வெளியான இரு நாட்களுக்கு பின்னர் நாங்கள் தொல்பொருள் திணைக்களத்தை பாதுகாப்போம் என தேரர் ஒருவரிற்கு ஜனாதிபதி ஊடக பிரிவால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அன்று தொல்பொருள் திணைக்களத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி எந்த செய்தி வெளிவர வேண்டும் என நினைத்தாரோ அது தான் வெளியில் வந்தது என கூறியுள்ளார்.

## தமிழ் நீதியரசர்களை...

விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சார்ள்ஸ் நிர்மலநாதன் இதனை தெரிவித்துள்ளார்.

ஆகவே வடக்கு கிழக்கு நீதிமன்றங்களின் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகள் மேன்முறையீட்டுக்கு வரும் போது தமிழ் நீதியரசர்கள் அதனை ஆராய வேண்டும் அல்லது வடக்கு கிழக்குக்கு என பொதுவான மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றியில் எதவு ஒன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீதிமன்ற விசாரணைகளில் தாமதம் ஏற்படாது என சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நிர்வாக சீர்கேட்டை கைவிட்டு...

ள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

பனை அபிவிருத்திச் சபையானது 1978ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு, பனையை நம்பிவாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் பனை வளம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் எனவும் உருவாக்கப்பட்ட ஒரு சபையாகும்.

இலங்கையின் பனை வளமானது முழுமையாக வடககு-கிழக்கையே சார்ந்துள்ளது. ஏறத்தாழ 11இலட்சம் பனை வளம் இங்கு இருப்பதாக அறியப்படுகிறது. ஆனால், இதைக் கொண்டு நடத்தும் பனை அபிவிருத்திச் சபையானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் சங்கங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு பனை வளத்தினை நம்பி வாழும் குடும்ங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பனைவள அபிவிருத்தியும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

பனைவள உற்பத்தி மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மட்டங்கள் ஒப்பீட்டள வில் கடந்த காலங்களைவிட மிகவும் குறைவாகவே காணப்படுவதுடன், பனைவளத்தினைக் கொண்டு பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தும் அவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதில்லை.

முதலாவதாக, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் இதன் தலைமைச்செயலகம் இருந்தபோதிலும்கூட, பல இலட்ச ரூபாய் வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கிவருகிறது.

இதன் காரணமாக, மிகப்பெருமளவிலான பனை வளத்தினை வடமாகாணம் கொண்டிருந்த போதிலும்கூட, அதன் பலன் மக்க ளைச் சென்றடையவில்லை. பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடு பற்றியோ அறியாத சிங்கள மொழிபேசும் தென்பகுதியைச் சார்ந்த ஒருவரை பனை அபிவிருத்திசபையின் தலைவராக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நியமித்தமை தவறானது. அவர் தென்பகுதியைச் சார்ந்தவராக இருப்பதால், தேவைக்கு மேலதிகமான வாடகையைக் கொடுத்து கொழும்பிலே நிர்வாகத்தை நடாத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தேவையற்ற செலவானது நாட்டின் பொருளாதார சீர்கேட்டிற்கு மேலும் உரமூட்டுவதுடன், பனைத்தொழிலை நம்பி வாழும் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாக பாதித்துள்ளது. வடக்கு-கிழக்கில் பனை வளத்துடன் ஈடுபாடு கொண்ட படித்த தகுதி வாய்ந்த இளைஞர்கள் யுவதிகள் ஆயிரக்கணக்கில் இருக்கையில் இந்தத் துறையுடன் தொடர்பில்லாத 25ற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர் யுவதிகளை பனை அபிவித்திச்சபை உள்வாங்கியிருப் பதும் இவர்களும் பெருமளவில் கொழும்பை மையமாகக் கொண்டு பணியாற்றி வருவதும் பனை அபிவிருத்திசபை கீழ்நோக்கிச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றது.

பனை அபிவிருத்தி சபையானது கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பருத்தித்துறை, திக்கம் பிரதேசத்தில் ஒரு வடிசாலையை நடத்தி வந்தது. மிகவும் இலாபகரமாக இயங்கி வந்த இந்த வடிசாலையினால் 3000 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தார்கள். இந்த வடிசாலையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வடக்கில் பொறுப்பாக இருந்த அமைச்சர்களினால் சூரையாடப்பட்டது. இவ்வளவு கொள்ளைகளும் சூரையாடல்களும் இடம்பெற்ற பின்னரும் கூட அது தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கி வந்தது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடிசாலை மூடப்பட்டதன் காரணத்தினால் இந்த வடிசாலைக்கு கள்ளை விநியோகித்து வந்த தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரைகாலமும் திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்தி வந்தது. வடிசாலைக்கான உரிமம், பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் அனைத்தும் பனை அபிவிருத்திச் சபையின் பெயரில் சமாசங்களிடமே இருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற பனை அபிவிருத்திச் சபையின் தலைவரான சிங்களப் பெருமகன், இந்த உரிமங்களை சிங்கள நபர் ஒருவருக்கு அளித்துள்ளதாக அறியமுடிகிறது.

இதனால் பனை வளச் சங்கங்கள் சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்படுவதுடன் இந்த சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டுமொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும் சீர்குலைக்கும் செயற்பாடாகும். இந்த நடவடிக்கைகளின் காரணமாக, பனம்பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கும் பங்களித்துள்ளது.

அமைச்சர்களின் அற்பத்தனமான, முன்யோசனையற்ற பதவி வழங்கல்களானது பனைவள அபிவிருத்தியை எவ்வளவுதூரம் பாதித்திருக்கிறது என்பதை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் ரீதியான முறையற்ற முகாமைத்துவமும், சீரற்ற நிர்வாக முகாமைத்துவமும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்திருக்கிறது என்பதை கடந்த இரண்டு வருடங்களாக நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பனைவள அபிவிருத்திச் சபைக்கான அதனை திறம்பட நடாத்துவதற்கான இலாபம் ஈட்டும் ஒரு துறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

1. வடக்கு மாகாணத்தின் தலைமைச் செயலகத்தை வினைதிறனாக இயங்க வைப்பதுடன் பல இலட்சங்களை வாடகையாக விழுங்கி ஏப்பம் விடும் கொழும்பு செயலகம் மூடப்படுவதுடன் அங்குள்ள அனைத்து கட்டமைப்புகளும் ஏற்கனவே உள்ள அரச ஆணைகளுக்கிணங்க, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

2. பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பனை வளத்தில் பரிச்சியமும் அத்துறையை அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் அனுபவமும் கொண்ட சரியான நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

3. பனைவள கூட்டுறவு சபைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் பனை வளத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள், சமாசங்கள் அதற்கென வழங்கிவரும் உதவிகள் ஒத்தாசைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

4. திக்கம் வடிசாலைக்குரித்தான அனைத்து உரிமங்களும் வழங்கப்பட்டு முன்னர் இதனை இயக்கிவந்த சமாசங்களுக்கே இவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதற்கான அனு மதி அளிக்கப்படவேண்டும்.

5. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் அதிகளவு அக்கறை கொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இதில் கூடுதல் கவனம் செலுத்தி பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு கோருகின்றோம்.

6. தனியாரை ஊக்குவித்து கூட்டுறவுத் துறையை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, கூட்டுறவுத்துறையை ஊக்குவித்து அவற்றை ஏற்கனவே இருந்ததுபோல் இலாபமீட்டும் துறையாகவும் வினைதிறன் மிக்கதாகவும் செயற்படுவதற்கு உதவுமாறு சகலரையும் கோருகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME

# மட்டு அரசடி சந்தி பிள்ளையார் ஆலயத்தில் திருடிய திருடன் 3 மாதத்தின் பின்னர் கைது!!




மட்டக்களப்பு நகர் அரசடி சந்தி பிள்ளையார் ஆலயம் மற்றும் வீடு உடைத்து பணம் மற்றும் கையடக்க தொலைபேசி உட்பட பொருட்களை திருடிவந்த ஏறாவூர் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரை செவ்வாய்க்கிழமை (04) கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட 2 கையடக்க தொலைபேசிகளை மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்பிரல் 8 ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள அரசடி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மடப்பள்ளி அறையில் வைக்கப்பட்டிருந்த குருக்கலின் கையடக்க தொலைபேசி 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் திறப்பு கோர்வை கைப்பேசி என்பவன திருடப்போயுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சிசிரி கமராவில் திருடன் பதிவாகியுள்ளதையடுத்து அவனை இனங்கண்டனர் இதனையடுத்து தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ். கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் சாஜன்களான கோகுலன், பிறேமதாஸ, வசந்து ஹகுமான், கொண்ட குழுவினர் மேற்கொண்டுவந்த விசாரணையில் ஏறாவூர் நீதி மன்ற வீதியிலுள்ள திருடனை கைது செய்துள்ளதுடன் இரண்டு கையடக்க தொலைபேசிகளை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்தவரிடம் மேற்கொண்ட விசாரணையில் அரசடி சந்தி பிள்ளையார் ஆலய திருட்டு மற்றும் இருதயபுரத்தில் வீடு ஒன்றில் கையடக்க தொலைபேசி திருட்டு, போதனா வைத்தியசாலையில் கையடக்க தொலைபேசி என்பன் திருடியுள்ளதாகவும் ஏறாவூரில் பல திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும் பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதார மந்த நிலையின் போது தமிழக முதலமைச்சர் செய்த உதவிகளை இலங்கை தமிழ் மக்கள் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டார்கள்! – செந்தில் தொண்டமான்



மறைந்த முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்தநாள் விழா இலங்கையிலும் அரசு விழாவாக கொண்டாடப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான் சென்னையில் நியூஸ் 7 தமிழுக்கு பிரத்யேக பேட்டி அளித்தார். அப்போது அந்த பேட்டியில் அவர் கூறியதாவது

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஓரிரு ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நீங்கி பழையை நிலை திரும்பும். பொருளாதார நெருக்கடியை சீரமைக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கே போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறார். பொருளாதார மந்த நிலையின் போது தமிழக முதலமைச்சர் செய்த உதவிகளை இலங்கை தமிழ் மக்கள் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டார்கள்.

மேலும் இலங்கை தமிழர்கள் மீது அதீதமான பற்று கொண்டவர் மறைந்த முதலமைச்சரும் திமுக தலைவருமான கருணாநிதி. அவர் இலங்கை மக்களுக்காக ஏராளமான நல்ல திட்டங்களை கொண்டு வந்தார். தமிழ்நாட்டை போலவே இலங்கை கிழக்கு மாகாணத்தில் கருணாநிதியின் பிறந்தநாள் அரசு விழாவாக பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக கொண்டாடப்படும்.

இவ்வாறு இலங்கை மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியா மாவட்டத்துக்கு பல்கலைக்கழகத்தை கோரினோமே தவிர மதுபானசாலைகளை அல்ல!! இராதாகிருஸ்ணன் எம்.பி. ஆதங்கம்!!!



பொருளாதார சுமையால் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களை மதுபோதைக்கு அடிமையாக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளமை முறையற்றதாகும்.

நுவரெலியா மாவட்டத்துக்கு பல்கலைக்கழகத்தை கோரினோமே தவிர மதுபான சாலைகளை கோரவில்லை. ஆகவே புதிய மதுபான சாலைகளை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (5) இடம்பெற்ற "நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்" தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமாவதற்கு பல்வேறு காரணங்கள் செலுத்துகின்றன. வழக்குகளை தாமதப்படுத்துவதால் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கின்றார்கள் . சாட்சிகள் மாறிப்போகின்றார்கள். சாட்சிப்பொருட்கள் அழிந்து போகின்றன. சில சமயங்களில் குற்றவாளிகள் இறந்து போகின்றார்கள்.

சாட்சிக்காரர்களும் இறந்துபோகின்றார்கள். வழக்குத்தாக்கல் செய்பவர்களும் இறந்து போகின்றார்கள்.ஆகவே வழக்குகள் தாமதிப்பதனால் வழக்கு தாக்கல் செய்பவர்கள், சாட்சிக்காரர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட இடமுண்டு. காலம் தாழ்த்தி வழக்குகள் விசாரிக்கப்படுவதால பணவிரயம் ஏற்படுகின்றது.

பெருந்தோட்ட பகுதிகளில் குறிப்பாக எமது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. பொதுவாக மலையகப்பகுதி மக்கள் வாழ்க்கை சுமையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மதுப்பழக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியை இப்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தை இரண்டு கலால் பிரிவுகளாக பிரித்தால் நுவரெலியா மாவட்டத்தில் 48 மதுபான சாலைகளும் அம்பகமுவ அதாவது ஹட்டன் பகுதியில் 64 மதுபான சாலைகளும் என மொத்தமாக 112 மதுபான சாலைகள் தற்போது உள்ளன.

பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்கள் தங்களுடைய வாழ்க்கை செலவை கொண்டு செல்ல முடியாத நிலையில் தமது வருமானத்தின் ஒரு பகுதியை இந்த மதுபானசாலைகளுக்கு செலவளிக்கும் நிலை ஏற்பட்டள்ளது. அதற்கும் அப்பால் இப்போது அரசியல்வாதிகளின் அனுசரணையோடு கடந்த வாரம் டயகம பகுதியில் புதிய மதுபானசாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அதை எதிர் த்து அங்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர்.

பொதுவாக டயகம பகுதியில் 4 கிராமசேவகர் பிரிவுகளில் 16714 மக்கள் வாழ்கிறார்கள். இந்தப்பகுதியில் மக்கள் மருந்து எடுப்பதற்கு ஒரு மருந்தகம் தான் உள்ளது. ஆனால் இங்கு 3 மதுபானசாலைகள் உள்ளன. இப்போது 4 ஆவதாக ஒரு மதுபான சாலையை திறக்கும் அனுமதியையும் அரசு வழங்கியுள்ளது. இந்த மதுபானசாலைக்கான அனுமதியை வழங்க அந்த தோட்டத்திலுள்ள தோட்டக் காணியை அந்த தோட்ட முகாமையாளர் கொடுத்துள்ளார்.

தலவாக்கலை பிரதேச சபை தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு பெரும் நன்மைகள் ஏற்படப்போகின்றது என நாங்கள் நினைத்தால் இந்த தலவாக்கலை பிரதேச சபை முதன்முதலாக இந்த மதுபான சாலைக்கே அனுமதி வழங்கியுள்ளது. மக்களின் வாழ்விடங்கள், கோவில்கள், பாடசாலைகள் உள்ள இடத்தில் இவ்வாறான மதுபான சாலை வருவதனால் கலாசாரம் அழிந்து விடும் நிலை ஏற்படும்.

இதேபோன்று அக்கரப்பத்தனை பகுதியில் 8 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. அங்கு 31725 பேர் வசிக்கின்றனர். இங்கு ஏற்கனவே 4 மதுபானசாலைகள் உள்ளன.இப்போது அங்கு மேலும் மதுபானசாலைகள் அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தில் புதிதாக சேர்ந்துள்ள கட்சிகளுக்கு ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு மதுபானசாலைகள் அல்லது 10 மதுபான சாலைகளை நுவரெலியாவுக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாம் அறிகின்றோம்.

நாம் நுவரெலியா மாவட்டத்துக்கு கேட்டது பல்கலைக்கழகம். ஆனால் கொடுக்கப்படுவதோ மதுபானசாலைகள். நாம் மதுபானசாலைகளை கேட்கவில்லை. இந்த மதுபானசாலைகளை மூடுவதன் மூலம் தான் அங்கு ஒரு கலாசார விடிவு ஏற்படும். மதுபானசாலைகள் எமது மக்களுக்கு அவசியமில்லை. மதுபான சாலைகளை முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். ஆகவே புதிதாக மதுபானசாலைகளை அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என்றார்.

# மகனது விடுதலைக்காய் போராடி இறைபதம் எய்திய வாகீஸ்வரி அன்னையின் முதலாமாண்டு நினைவேந்தல்!



கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த விக்கினேஸ்வரநாதன் பார்த்தீபன் என்ற தமிழ் அரசியல் கைதியின் தாயாரான விக்கினேஸ்வரநாதன் வாகீஸ்வரி, 27ஆண்டுகளாக தொடர் சிறை வைக்கப்பட்டுள்ள தனது மகனது விடுதலைக்காக கடுமையாகப் போராடி வந்திருந்த நிலையில், பிள்ளையின் முகம் காணாமலே கடந்தாண்டு இவ்வுலகைவிட்டு பிரிந்திருந்தார்.

சமூக எண்ணங்கொண்டு இம்மண்ணை நேசித்த வாகீஸ்வரி அம்மாவின் ஆத்மா உண்மையிலேயே சாந்தியடைய வேண்டுமானால், 28 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை சிறை வைக்கப்பட்டுள்ள பார்த்தீபன் உட்பட சக தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப் படவேண்டும் என்கின்ற மெய்ப்பொருளின் அடிப்படையில், தாயாரது முதலாமாண்டு நினைவேந்தலை குரலற்றவர்களின் குரல் அமைப்பு, குடும்பத்தாருடன் இணைந்து அடையாளப்படுத்தி அனுஸ்டித்துள்ளது.



# முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேச ஜனாதிபதியை சந்தித்த ஹரீஸ் : இசாக் எம்.பிக்கள் !



இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் நேற்று (05) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார். ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான நாங்கள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் உடனடியாக குறித்த பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் கட்சிகளையும், முஸ்லிம் எம்.பிக்களையும் அழைக்க உள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைநீக்கம் தொடர்பில் இதுவரை வர்த்தமானி அறிவிப்பு வெளிவராமை சம்பந்தமாக வினவியபோது பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் சகல பணிகளையும் மேற்கொண்டு வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும், விரைவில் தடைநீக்க வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் முஸ்லிம் சிவில் நிர்வாகசேவை அதிகாரிகளுக்கு உரிய கடமைப்பொறுப்புக்களை வழங்குவதில் உள்ள பாரபட்சம் தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டதாகவும் இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளையும், முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளையும் விரைவில் தான் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் பொறுத்தமான பயனாளிகள் புறக்கணிக்கப்பட்டுள்ள விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு முன்வைத்தபோது உரிய பயனாளிகளுக்கு இந்த உதவிகள் கிடைக்கும் விதமாக அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் இடம்பெற்றுள்ள குறைபாட்டை நிவர்த்திசெய்ய உள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்தார். மேலும் மாகாண சபைகளில் உள்ள நிர்வாக குறைபாட்டை சீர்செய்யவும், நிர்வாக திறனை அதிகரிக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. நாட்டிலுள்ள ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாகாண அமைச்சுக்களின் நிர்வாக வினைத்திறனை அதிகரிக்க புதிய பொறிமுறையை உருவாக்கி அதன்மூலமாக மாகாண அமைச்சுக்கள் வினைத்திறனுடன் செயற்பட வழிவகை ஏற்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது எங்களிடம் உறுதிபட கூறினார். மட்டுமின்றி ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்தார்.

## வவுனியா ஏ9 வீதியில் வானுடன் மோட்டார் சைக்கில் மோதுண்டு விபத்து! ஒருவர் பலி

வவுனியா ஏ9 வீதி அரசாங்க விதை உற்பத்தி பண்ணைக்கு அண்மித்த பகுதியில் நேற்று (05.07.2023) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனத்தினை ஏ9 வீதி அரசாங்க விதை உற்பத்தி பண்ணைக்கு அண்மித்த பகுதியில் அதே பாதையில் பயணித்த மோட்டார் சைக்கில் கனரக வாகனத்தினை முந்திச்செல்ல முற்பட்ட சமயத்தில் எதிர்த் திசையில் வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வானுடன் மோதுண்டு மோட்டார் சைக்கில் விபத்துக்குள்ளானதுடன் 600மீற்றர் தூரம் வரையில் மோட்டார் சைக்கில் தரையில் இழுத்துச்சென்றுள்ளாதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

இச் விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிலின் சாரதியான வவுனியா குருமன்காடு பகுதியினை சேர்ந்த 24வயதுடைய சிவகுமார் ருபீன்ஸ்ராஜ் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளமையுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மூன்று வாகனங்களும் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளமையுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மல்வத்தையில் மதுபானசாலையா? வேண்டவே வேண்டாம்! பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!



அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தை கிராமத்தில் புதிதாக மதுபான சாலை
திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதியில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து நேற்று (5) புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

" மல்வத்தை பூர்வீக தமிழ் கிராமத்தை அழிக்க திட்டமிட்ட சதி " மதுபானசாலையை அமைக்க நாம் இடம் தர மாட்டோம் உட்பட பல்வேறு வாசகங்கள் ஏந்திய பதாதைகளை சுமந்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை மல்வத்தை பிரதான வீதியிலுள்ள நாற்சந்தியில் பேரணியாக வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெறும் செய்தியை அறிந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து வந்து கலந்து கொண்டதுடன், மக்களின் மகஜரையும் பெற்று கொண்டார்.

அத்தருணத்தில் சமுக செயற்பாட்டாளர்களான வெ.ஜெயச்சந்திரன், பொன்.நடராசன், துரையப்பா காத்தவராயன், து.கஜேந்திரன், தங்கவேல் கண்ணன், கே.சுரேஸ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் சேர்ந்து தயாரித்த மகஜரை அம்பாறை அரசாங்க அதிபர் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பொலீஸ் பொறுப்பதிகாரி மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அம்பாறை நகரில் ஐந்து மதுபானசாலைகள் இருக்கின்ற நிலையில் மல்வத்தை கிராமத்தில் மதுபான சாலை எதற்கு? என்றும் கேள்வியெழுப்பினர்.

பிரதேச பிரதிநிதிகளான வெ.ஜெயச்சந்திரன் பொன்.நடராசன் உள்ளிட்ட பலர் கருத்துத் தெரிவிக்கையில்,

"பழம்பெரும் சிறிய கிராமமான மல்வத்தை கிராமத்தில் ஒரு பிரதேச சபை வசதியோ, ஒரு சதொச நிலையமோ, எரிபொருள் நிலையமோ இல்லாதுள்ள நிலையில் மதுபான சாலை அமைக்க காரணம் என்ன?

கூலித் தொழிலாளர்கள் நிறையவே உள்ள சாதாரண தர தமிழ் மக்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் மேலும் மக்களின் வாழ்க்கையை அழிக்க மதுபான சாலை வழிவகுக்கும்.

சில அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத அரசியல்வாதிகள் மதுபான சாலையை அமைக்க திட்டமிட்டிருப்பது ஏனொ! எங்களை கூழோ கஞ்சியோ குடித்து நிம்மதியாக வாழ விடுங்கள்.

200 வருடகாலமாக மதுபானத்தினால் அழிந்தது போதும் இனியும் வேண்டாம் இந்த நிலை" என்றார்கள்.

மதுபான நிலையத்தை அமைத்துக்கொடுத்து எம்மிடமுள்ள எச்ச சொச்ச பொருளாதாரத்தையும் சீரழிக்க அனுமதிக்க முடியாது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

## சம்மாந்துறையில் உயர் தொழில் நுட்பவியல் கல்வி மாணவர்கள் நிர்மானித்த பஸ் தரிப்பு நிலையம் திறப்பு



சம்மாந்துறை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவன முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பகுதிநேர மாணவர்கள் நஜா பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையுடன் சம்மாந்துறை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முன்பாக பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் செவ்வாய்க்கிழமை (04) திறந்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (ஏ.ரி.ஜ) பணிப்பாளர் எஸ்.எல். முஸ்தபாவின் ஆலோசனையின் கீழ் நஜா பவுண்டேசன் அமைப்பின் நிதியுடன் முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பகுதிநேர மாணவர்கள் புதிய பஸ் தரிப்பிடம் நிர்மானித்தனர். இதேவேளை இது முதலாம் வருட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா மாணவர்களின் பாடத்திட்டத்தில் உள்ள சமூக பொறுப்புணர்வுகுறித்த குழு செயற்திட்டத்திற்கு ஏற்ப இவ் வேலைதிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஸ்வெசும பயனாளிகள் தெரிவு தொடர்பான பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்




பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட வுள்ள அஸ்வெசும சமூக நலன்புரி உதவித் திட்ட பயனாளிகள் தெரிவில் காணப்படும் குறைபாடுகள் முறையாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என சிவில் அமைப்புகளை ஒன் றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக் கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்தி யுள்ளது.

காரைதீவு பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத் தில் இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமை யில் நடைபெற்ற சிவில் அமைப்புகளை ஒன் றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக் கும் நீதிக்குமான வலையமைப்பின் சந்திப்பில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும்,

இவ் நலன்புரி உதவி திட்டமானது பாகுபாடில் லாது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என கலந்துரையாடலில் வலியுறுத் தப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் 20க்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகள் இணைந்து விடு த்துள்ள ஊடக அறிக்கையிலே இதனை தெரி வித்துள்ளது.

## ஆந்திரா மாநில முதல்வருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்திப்பு!




ஆந்திர மாநில முதலமைச்சர் ஜகன்மோகன் ரெட்டி அவர்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்து இருநாடுகளு க்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்து வது குறித்தும், கரும்பு மற்றும் மிளகாய் விவ சாய, மருந்துகள் உற்பத்தி நிறுவனம் அமைப் பது குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண் டார்.

BOI ஆடைகள் பூங்கா குறித்தும் , திருகோண மலை துறைமுகத்தில் உள்ள தொழிற்பூங்கா வில் முதலீட்டாளர்களை தொழில் பூங்கா அமைக்க ஊக்குவிப்பது குறித்தும் ஆந்திர மாநில அரசிடம் செந்தில் தொண்டமான் கோரி க்கை விடுத்தார்.

இலங்கையில் திருப்பதி திருமலை கோவில் பக்தர்கள் அதிகளவில் உள்ள நிலையில் வயது மூப்பு காரணமாக திருப்பதிக்கு பயணம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்க ளின் வசதிக்காக இலங்கையில் திருப்பதி திரு மலை கோவில் அமைக்கவும் கோரிக்கை விடு க்கப்பட்டது. இக்கோரிக்கைக்கு சாதகமான பதிலை முதலமைச்சர் அளித்தார் . இந்த சந் திப்பில் ஆந்திர முதலமைச்சர் அவர்களால் திருப்பதி பெருமாள் சுவாமி சிலை செந்தில் தொண்டமானுக்கு வழங்கி கௌரவிக்கப்பட் டது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான இந்திய துணை தூதர் டாக்டர். வெங்கடேஷ் மற்றும் இலங்கை நாட்டின் அலுவலர்கள் பங்கேற் றனர்.

## கிழக்கு பல்கலைக்கழகத்தின் 9வது

### சர்வதேச யோகாதினத்தையொட்டிய 4 நாள் நிகழ்வுகள்!!




கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக சித்த மருத்துவ பீடமும், தொழிற்துறை மற்றும் சமூக இணைப்பு மையத்தின் அலகும் இணைந்து நடாத்திய 9வது சர்வதேச யோகா தின நிகழ்ச்சித்திட்டங்களை கடந்த 4 நாட் களாக முன்னெடுத்திருந்தது.

இந்நிகழ்ச்சிகளை சுவாமி விவேகானந்தா கலாசார மையம், கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகராலயம், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், TRINCO AID இல ங்கை செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை இந்த 9வது சர்வதேச யோகாதின நிகழ்வு களை சிறப்பிக்க பல வகையில் ஒத்துழைப்புக் களை வழங்கியது.

இதன் முதல்நாள் நிகழ்வாக, யோகா விழிப்பு ணர்வு பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தை திரு கோணமலை பிரதேச சபை காரியாலயத்தில் நடாத்தியது. இரண்டாம் நாள் யோகா பற்றிய விழிப்புணர்வுடன் ஆரம்பிக்கப்பட்ட நடைப வனியின்போது பொதுமக்களின் ஆரோக்கிய வாழ்வை யோகாவின் மூலம் மேம்படுத்த லாம் என்ற குறிக்கோளை முன்வைத்து இடம் பெற்றது.

மூன்றாவது நாள் நிகழ்வாக, திருகோண மலை வளாக ஒன்றுகூடல் மண்டபத்தில் சித்த மருத்துவபீட மாணவர்களினால் நடாத்தப்பட்ட யோகா ஆற்றுகை தொடர்பான பல நிகழ்ச்சி களை செய்து காண்பித்தனர். இந்நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக கிழக்கு பல்கலை க்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனக சிங்கமும், சிறப்பு விருந்தினராக இந்திய உயர் ஸ்தானிகராலய கலாசார பிரிவு இயக்குனர் பேராசிரியர் அங்குரன் டக்தாவும், கௌரவ விருந்தினராக திருகோணமலை வளாக முத ல்வர் பேராசிரியை சந்திரவதனி தேவதாசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நான்காம் நாள் இறுதி நிகழ்வாக, திருகோண மலை தடுப்பு சிறை உத்தியோகர்களுக்காக நடாத்தப்பட்ட யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி யில், யோகாவின் மூலம் ஆரோக்கிய வாழ் வினை மேம்படுத்துதல் என்ற விழிப்புணர் வுகளை வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்த க்கது.

## மாளிகைக்காடு பிரதேச கடலரிப்பைத் தடுக்க பைசால் காசீம் எம்.பி அதிரடி நடவடிக்கை!




காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட மாளிகைக் காடு கிராமத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரி ப்பை தடுக்க திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசீமினால் அதிரடி நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

மாளிகைக்காட்டில் ஏற்பட்ட கடலரிப்பின் கார ணமாக கடற்கரை மிக வேகமாக பாதிக்கப் பட்டு அண்மித்த கட்டிடங்களும் பாதிக்கப்பட்டு ள்ளன.

இதுவிடயமாக மீனவர் அமைப்புக்கள் மற்றும் மாளிகைக்காடு கிழக்கு வட்டார முஸ்லிம் காங் கிரஸ் அமைப்பாளர் எம்.எச் நாஸர் ஆகியோர் திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந் ததற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் குறி த்த இடத்திற்கு விஜயம் செய்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் அவர்களுடன் அம்பாறை மாவட்ட கரை யோரப் பாதுகாப்புத் திணைக்களப் பொறியிய லாளர் எம். துளசிதாஸன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், கல்முனை மாவ ட்ட கடற்றொழில் உதவி ஆணையாளர் எஸ். ஸ்ரீரஞ்சன் மற்றும் கரையோரப் பாதுகாப்பு வெளிக் கள உத்தியோகத்தர் காரைதீவு பிர தேசத்திற்குப் பொறுப்பான தஸ்தகீர், சாய்ந்த மருது பிரதேசத்திற்குப் பொறுப்பான நுஸ்றத் அலி ஆகியோரும் வருகை தந்தனர்.

உயர்மட்டக் குழுவினர் சேதமடைந்த இடங் களைப் பார்வையிட்டதும், மாளிகைக்காடு அந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம், ஜனா ஸா நலன்புரி அமைப்பு, பொத்த மீன் வியாபார வர்த்தக சங்கம், ஆழ்கடல் மீன்பிடிச் சங்கம், சிறு படகு உரிமையாளர் சங்கம், ஆகிய வற்றின் பிரதிநிகள் மற்றும் பொது மக்களுட னான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பைசால் காசீமின் வேண்டுதலுக்கிணங்க முதற் கட்ட தற்காலிக ஏற்பாடாக லியோ பேக்கில் மண் நிரப்பி கரை யோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் பின்னர் நிரந்தத் தீர்வொன்றை துரித கதியில் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வேலை இன்று வியாழக்கிழமை (06.07.2023) ஆரம்பிக்கப்படும் என கரையோரப் பாதுகாப்பு திணைக்களப் பொறியி யலாளர் எம். துளசிதாஸன் இங்கு குறிப் பிட்டார்.

## வவுனியாவில் இராணுவ தலைமை அலுவலகத்திற்கு முன்பாக தீக்குளிக்க முயன்ற இரண்டு பிள்ளைகளின் தயார்!



வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவ தலைமை அலுவலகத்திற்கு முன் பாக நேற்று (05.07.2023) காலை இரண்டு பிள்ளைகளின் தயார் மண்ணெண்ணை ஊற்றி தற்கொலைக்கு முயன்ற நிலையில் வவுனியா பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகை யில்,

குருநாகல் வரக்காபொல பகுதியில் வசித்து வரும் 34வயதுடைய குறித்த பெண்ணிற்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இவர்களின் குடும்பத்தினுள் ஏற்பட்ட முரண்பாடு காரண மாக இரண்டு பிள்ளைகளையும் தந்தை அழைத்துச்சென்று இருவரும் சில மாதங்க ளாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இந் நிலையில் குறித்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கும் வன்னி இராணுவ தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் குடும்பஸ்தரான இராணுவ வீரருக்குமிடையே தொடர்பு ஏற்பட் டுள்ளது. எனினும் சில வாரங்களாக குறித்த இராணுவ வீரருடைய தொடர்பு துண்டிக்கப்ப ட்டுள்ளது.

இதனால் விரகர்த்தியடைந்த குறித்த குடும்ப பெண் அவரை தேடி வன்னி இராணுவ தலைமை அலுவலகத்திற்கு சென்ற போதிலும் குறித்த இராணுவ வீரரை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப் பெண் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக தீக்குளிக்க முற்பட்ட சமயத்தில் வவுனியா பொலிஸாரினால் அவர் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்ப ட்டார்

குறித்த பெண்ணிக்கு பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரியினால் அறிவுரைகள் வழங்கப்பட்ட துடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.




ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture |
Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner |
Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds |
Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069


சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004


காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025


STUDIO
Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL
PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.






இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.